**நவம்பர் – 30**


# TNPSC துளிகள்

- இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெற உள்ள 2026 ஆம் ஆண்டு ICC ஆடவர் T20 உலகக் கோப்பை போட்டிக்கான தூதராக ரோஹித் சர்மா நியமிக்கப்பட்டுள்ளார்.
- 1921 ஆம் ஆண்டு துல்சா இனப் படுகொலையில் இருந்து தப்பிய வயது முதிர்ந்த வயோலா பிளெட்சர், சமீபத்தில் அமெரிக்காவின் ஒக்லஹோமாவின் துல்சாவில் காலமானார்.
- கொச்சியில் உள்ள மத்திய கடல் சார் மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் (CMFRI) ஆராய்ச்சியாளர்கள், அரேபியக் கடலில் ஒரு புதிய ஆழ்கடல் கணவாய் மீன் இனத்தைக் கண்டறிந்துள்ளனர் என்ற நிலையில் இதற்கு கடல் சார் உயிரியலாளர் E. G. சிலாஸின் நினைவாக டானிங்கியா சிலாசி என்று பெயரிடப்பட்டது.
- தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் 2026 ஆம் ஆண்டில் சர்வதேச ஜனநாயகம் மற்றும் தேர்தல் உதவி நிறுவனத்தின் (சர்வதேச IDEA) தலைவராகப் பணியாற்ற உள்ளார்.
- இந்தியப் புவியியல் ஆய்வு மையம் (GSI), அதன் 175வது ஸ்தாபன ஆண்டு கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, ஜெய்ப்பூரில் உள்ள இராஜஸ்தான் சர்வதேச மையத்தில் "Unearthing the Past, Shaping the Future: 175 Years of GSI" என்ற கருத்துருவில் சர்வதேச கருத்தரங்கை ஏற்பாடு செய்தது.
- 2030 ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான நகரமாக அகமதாபாத் அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டது.
- உஸ்பெகிஸ்தானின் செஸ் கிராண்ட் மாஸ்டர் ஜவோகிர் சிந்தரோவ், கோவாவில் நடைபெற்ற டைபிரேக்கர் போட்டிகளில் சீனாவின் வெய் என்பவரை தோற்கடித்து, இளம் FIDE உலகக் கோப்பை சாம்பியனானார்.
- அபுதாபியில் நடைபெற்ற உலகத் தொழில்முறை ஜியு-ஜிட்சு சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியத் தடகள வீரர் ஜியோவானா டி செக்யூரா வெண்கலம் வென்றார்.
- குவாங்டாங் மாகாணத்தின் கைப்பிங்கில் ஜியாங்மென் நிலத்தடி நியூட்ரினோ ஆய்வகத்தை (JUNO) சீனா கட்டி முடித்துள்ளது.
- புது டெல்லியில் நடைபெற்ற 44வது இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சியில் (IITF-2025) இந்தியா தனது வளமான பழங்குடியினக் கலைகள் மற்றும் கைவினைப் பொருட்களைக் காட்சிப்படுத்தியது.
    - காட்சிப்படுத்தப்பட்டத் தயாரிப்புகளில் டசார் பட்டு நெசவு, பைட்கர் சுருள் ஓவியங்கள், அலங்காரத் தையல் மற்றும் கண்ணாடி வேலைப்பாடு கொண்ட ஜவுளி மற்றும் பரேவா சிலைகள் ஆகியவை அடங்கும்.
- பொருளாதார வளர்ச்சி, சமூக நல்வாழ்வு மற்றும் குறைந்த உமிழ்வுக்கான பாதுகாப்பான, மலிவான, அணுகக் கூடிய மற்றும் நிலையானப் போக்குவரத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் வகையில் நவம்பர் 26 ஆம் தேதியன்று உலக நிலையானப் போக்குவரத்து தினம் அனுசரிக்கப்படுகிறது.
- பச்சிளம் குழந்தைகளின் ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தை ஒரு முக்கிய முன்னுரிமைப் பகுதியாக வலுப்படுத்தும் வகையில் நவம்பர் 15 முதல் 21 ஆம் தேதி வரை தேசியப் பச்சிளம் குழந்தைகள் வாரம் அனுசரிக்கப்பட்டது.

- அனைத்து விமான நிலையங்களிலும் விமானப் பாதுகாப்பை வலுப்படுத்தச் செய்வதற்காக இந்திய விமான நிலைய ஆணையம் ஆனது 2025 ஆம் ஆண்டு நவம்பர் 24 முதல் 28 ஆம் தேதி வரை "விமானப் பாதுகாப்பு விழிப்புணர்வு வாரத்தினை" அனுசரிக்கிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு தொழில்நுட்ப ஜவுளித் திட்டம்




- தமிழ்நாடு தொழில்நுட்ப ஜவுளித் திட்டம் ஆனது ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் 15 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் தொடங்கப்பட்டுள்ளது.
- ஆலோசனைக் கட்டணத்தில் 50 லட்சம் அல்லது 50% திருப்பிச் செலுத்தப்படுவதுடன் தொழில்முனைவோர் அங்கீகரிக்கப்பட்ட ஆலோசகர்களிடமிருந்து வழிகாட்டுதலைப் பெறலாம்.
- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்கள் (MSME) அமைச்சகம் மற்றும் ஜவுளித் துறை அமைச்சகத்தின் பல திட்டங்கள் தொழில்நுட்ப ஜவுளித் துறையில் முதலீடுகளை ஆதரிக்கின்றன.
- மாநில அரசானது, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கோயம்புத்தூரில் ஒரு தொழில் நுட்ப ஜவுளி கண்காட்சியை ஏற்பாடு செய்யும், மேலும் உற்பத்தியாளர்களையும் வாங்குபவர்களையும் இணைக்க ஒரு வர்த்தக வசதி வலை தளத்தினையும் தொடங்கும்.
- தொழில்நுட்ப ஜவுளித் துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக மூன்று அல்லது நான்கு நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்படும்.
- மொத்தம் 480 கோடி ரூபாய் முதலீட்டில் தொழில்நுட்ப ஜவுளித் துறையில் 24

தொழில்துறை அலகுகளை அமைப்பதற்கு வசதி செய்ய இத்துறை திட்டமிட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## இந்திய இணைய ஆளுகை மன்றம் (IIGF) 2025




- இந்திய இணைய ஆளுகை மன்றம் (IIGF) ஆனது புது டெல்லியில் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY) மற்றும் இந்தியத் தேசிய இணையப் பரிமாற்றம் (NIXI) ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- உள்ளடக்கிய மற்றும் நிலையான டிஜிட்டல் எதிர்காலத்திற்காக இணைய நிர்வாகத்தை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நிகழ்வின் கருத்துரு, "Advancing Internet Governance for an Inclusive and Sustainable Viksit Bharat" என்பதாகும்.


## SAESI மையம்




- தெலுங்கானாவின் ஐதராபாத்தில் அமைக்கப்பட்டுள்ள சஃப்ரான் விமான எஞ்சின் சேவை இந்தியா (SAESI) மையத்தினை பிரதமர் திறந்து வைத்தார்.
- இந்த மையம் Leading Edge Aviation Propulsion (LEAP) எஞ்சின்களின் உற்பத்திக்காக அமைக்கப் பட்டுள்ளது.
- இந்த எஞ்சின்கள் ஏர்பஸ் A320neo மற்றும் போயிங் 737 MAX விமானங்களுக்கு ஆற்றல் அளிக்கின்றன.
- SAESI என்பது மிகப்பெரிய உலகளாவிய விமான எஞ்சின் பராமரிப்பு, பழுதுபார்ப்பு

மற்றும் புதுப்பித்தல் (MRO) மையங்களில் ஒன்றாகும் என்பதோடு இது இந்தியாவில் முதலாவது உலகளாவிய அசல் எஞ்சின் உபகரண உற்பத்தியாளர் (OEM) செயல்பாட்டைக் கொண்டுள்ளது.

## அடிப்படை கால்நடைப் பராமரிப்பு குறித்தப் புள்ளி விவரங்கள் 2025





- தேசியப் பால் தினமான 2025 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் தேதியன்று மீன்வளம், கால் நடைப் பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகம் ஆனது 2025 ஆம் ஆண்டு அடிப்படை கால்நடைப் பராமரிப்பு குறித்த புள்ளி விவரங்கள் (BAHS) அறிக்கையை வெளியிட்டது.
- 2024–25 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த மாதிரி கணக்கெடுப்பினை (ISS) அடிப்படையாகக் கொண்ட இந்த அறிக்கையானது, பால், முட்டை, இறைச்சி, கம்பளி, கால்நடை எண்ணிக்கை மற்றும் தொடர்புடைய உள்கட்டமைப்பு பற்றியத் தரவுகளை வழங்குகிறது.
- 247.87 மில்லியன் டன் பால் உற்பத்தியுடன், உலகளாவியப் பால் உற்பத்தியில் இந்தியா முதல் இடத்தில் உள்ளது.
- மேலும், இந்தியாவில் தனி நபருக்குப் பால் கிடைக்கும் விகிதம் (2014-15 ஆம் ஆண்டில்) ஒரு நாளைக்கு 319 கிராமிலிருந்து (கிராம்) சுமார் 485 கிராமாக (2024-25 ஆம் ஆண்டில்) அதிகரித்துள்ளது.
- பால் உற்பத்தியில் முன்னணியில் உள்ள மாநிலங்கள் உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், குஜராத் மற்றும் மகாராஷ்டிரா ஆகியனவாகும்.
- முட்டை உற்பத்தி 149.11 பில்லியனை எட்டியதுடன், இந்தியா இதில் உலகளவில் 2வது இடத்தில் உள்ளது.
- முட்டை உற்பத்தியில் முதல் 5 மாநிலங்கள்: ஆந்திரப் பிரதேசம் 18.37% பங்கைக்

கொண்டுள்ளது, அதைத் தொடர்ந்து தமிழ்நாடு (15.63%), தெலுங்கானா (12.98%), மேற்கு வங்காளம் (10.72%), மற்றும் கர்நாடகா (6.67%).

- 10.50 மில்லியன் டன்கள் அளவிலான இறைச்சி உற்பத்தியுடன் இந்தியா உலகளவில் 4வது இடத்தில் உள்ளது.
- இறைச்சி உற்பத்தியில் முதல் 5 மாநிலங்கள்: மேற்கு வங்கம் 12.46% பங்கைக் கொண்டு உள்ளது, அதைத் தொடர்ந்து உ.பி. (12.20%), மகாராஷ்டிரா (11.57%), ஆந்திரா (10.84%) மற்றும் தெலுங்கானா (10.49%).
- கம்பளி உற்பத்தி 34.57 மில்லியன் கிலோ ஆக உள்ளது.
- கம்பளி உற்பத்தியில் முதல் 5 மாநிலங்கள்: ராஜஸ்தான் 47.85% பங்கைக் கொண்டு உள்ளது, அதைத் தொடர்ந்து ஜம்மு & காஷ்மீர் (22.88%), குஜராத் (6.22%), மகாராஷ்டிரா (4.75%) மற்றும் இமாச்சலப் பிரதேசம் (4.30%).
- இந்தப் புள்ளி விவரங்கள் இந்தியாவின் கால்நடை மற்றும் பால் துறையில் கொள்கை வகுத்தல், ஆராய்ச்சி மற்றும் நிலையான வளர்ச்சியை ஆதரிக்கின்றன.

## கோவா புலிகள் சரணாலயம்




- உச்ச நீதிமன்றக் குழுவானது, படிப்படியாக கோவா புலிகள் சரணாலயத்தை உருவாக்கப் பரிந்துரைத்துள்ளது.
- முதல் கட்டத்தில், நேத்ராவளி மற்றும் கோடிகாவோ வனவிலங்குச் சரணாலயங்கள் உட்பட 468.6 சதுர கி.மீ. பரப்பளவு அறிவிக்கப்படும்.
- இரண்டாவது கட்டத்தில், மகாதேய் வனவிலங்குச் சரணாலயம் உட்பட 208 சதுர கி.மீ. பரப்பளவினை அறிவிப்பது குறித்து பின்னர் பரிசீலிக்கப்படலாம்.
- இந்தப் பகுதிகள் கர்நாடகாவின் காளி புலிகள் சரணாலயத்துடன் இணைந்து, 1,814 சதுர கி.மீ. அளவிலான ஒருங்கிணைந்த நிலப்பரப்பை உருவாக்கும்.
- முக்கிய மண்டலங்கள் கண்டிப்பான முறையில் பாதுகாக்கப்படுவதோடு, புலிகள் வளங் காப்பிற்கான நிதி மற்றும் ஆதரவை உறுதி செய்து, இடையக/தாங்கு

மண்டலங்களில் வரையறுக்கப்பட்ட மனிதச் செயல்பாடுகள் அனுமதிக்கப்படும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## விக்ரம்-I ஏவுகலம்

- விக்ரம்-I என்பது ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதல் தனியார் வணிக பயன்பாட்டு சுற்றுப்பாதை ஏவு கலம் ஆகும்.
- பிரதமர் இந்த ஏவு கலத்தினை வெளியிட்டு, ஐதராபாத்தில் அமைக்கப்பட்டுள்ள மாதத்திற்கு ஒரு சுற்றுப்பாதை ராக்கெட்டை உற்பத்தி செய்யக் கூடிய ஸ்கைரூட்டின் இன்ஃபினிட்டி வளாகத்தைத் திறந்து வைத்தார்.
- விக்ரம்-I ஆனது சிறிய செயற்கைக்கோள்களை புவியின் தாழ் மட்ட சுற்றுப்பாதையில் ஏவுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதோடு ஸ்கைரூட்டின் துணை சுற்றுப் பாதை நிலையிலிருந்து சுற்றுப்பாதை ஏவல் நிலைக்கு மாறுவதை இது குறிக்கிறது.
- ஸ்கைரூட் நிறுவனம் முன்னதாக 2022 ஆம் ஆண்டில் விக்ரம்-S என்ற இந்தியாவின் முதல் தனியார் துணை சுற்றுப்பாதை ஏவு கலத்தினை விண்ணில் ஏவியது.




## செவ்வாய்க் கிரக நிலப்பரப்புகளுக்கான புதிய பெயர்கள்


- செவ்வாய்க் கிரகத்தில் உள்ள 3.5 பில்லியன் ஆண்டுகள் பழமையான பள்ளத்திற்கு இந்தியப் புவியியலாளர் M.S. கிருஷ்ணனின் பெயரிடப்பட்டுள்ளது.
- சர்வதேச வானியல் ஒன்றியம் (IAU) ஆனது இந்தப் பெயரை அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்தது.
- கேரளாவினை அடிப்படையாகக் கொண்டு வலியமலை, தும்பா, பெக்கல், வர்க்கலா மற்றும் பெரியார் ஐந்து பெயர்கள் தற்போது அருகிலுள்ள பள்ளங்களுக்கும் செவ்வாய்ப் பள்ளத்தாக்கிற்கும் வழங்கப்பட்டுள்ளன.
- இந்தப் பள்ளம் ஆனது பண்டைய காலப் பனிப்பாறைகள் மற்றும் ஆறுகளின் சான்றுகளைக் கொண்ட ஒரு பகுதியான சாந்தே டெர்ராவில் அமைந்துள்ளது.
- பெரிய பள்ளங்களுக்கு இறந்த விஞ்ஞானிகளின் பெயரிடப்பட்டுள்ளன; சிறிய

பள்ளங்களுக்கு நகரங்கள் அல்லது கிராமங்களின் பெயரிடப் பட்டுள்ளன.

- செவ்வாய்க் கிரகத்தில் உள்ள அம்சங்களுக்கு கேரளாவில் உள்ள இடங்களின் பெயர்கள் பயன்படுத்தப் படுவது இதுவே முதல் முறையாகும்.




## புற்றுநோய்ச் சிகிச்சைக்கான AI கட்டமைப்பு





- S.N. போஸ் தேசிய அடிப்படை அறிவியல் மையம் மற்றும் அசோகா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இந்திய ஆராய்ச்சியாளர்கள் ஆன்கோமார்க் என்ற செயற்கை நுண்ணறிவு கட்டமைப்பை உருவாக்கியுள்ளனர்.
- ஆன்கோமார்க் ஆனது மூலக்கூறு மட்டத்தில் புற்றுநோயை பகுப்பாய்வு செய்து, கட்டி வளர்ச்சியை இயக்கும் உயிரியல் செயல்பாடுகளில் (அடையாளங்கள்) கவனம் செலுத்துகிறது.
- இந்த அமைப்பு 14 புற்றுநோய் வகைகளில் இருந்து 3.1 மில்லியன் ஒற்றை செல்களை ஆய்வு செய்து கட்டிகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்ய போலி திசு ஆய்வுகளை உருவாக்கியது.
- சுயாதீன உலகளாவிய தரவுத் தொகுப்புகளில் OncoMark 99 சதவீதத்திற்கும் அதிகமான

உள்ளக துல்லியத்தையும் 96% துல்லியத்தையும் அடைந்தது.

- இது மருத்துவர்கள் மோசமான கட்டிகளை அடையாளம் காணவும், தனிப்பயனாக்கப் பட்ட, இலக்கு வைக்கப்பட்ட சிகிச்சைகளை வழி நடத்தவும், இந்தியாவில் துல்லிய மருத்துவத்தை மேம்படுத்தவும் உதவுகிறது.

## குவாண்டம் உருவாக்க மையங்கள்

- இந்தியா, தேசிய குவாண்டம் திட்டத்தின் கீழ் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் (IIT) டெல்லி, IIT பம்பாய், IIT கான்பூர் மற்றும் இந்திய அறிவியல் கல்வி நிறுவனம், (IISc) பெங்களூரு ஆகியவற்றில் நான்கு மேம்பட்ட குவாண்டம் உருவாக்க மையங்களை அமைக்க உள்ளது.
- குவாண்டம் உணர்வுக் கருவிகள், குவாண்டம் கணினி மற்றும் குவாண்டம் பொருட்களில் கவனம் செலுத்தும் இந்த மையங்கள் பாதுகாப்பான மற்றும் மேம்படுத்தக் கூடிய குவாண்டம் சாதனங்களை உருவாக்கும்.
- IIT பம்பாய் மற்றும் IIT கான்பூர் குவாண்டம் உணர்வுக் கருவிகள் மற்றும் அளவியலை மேற்கொள்ளும்.
- IISc பெங்களூரு மற்றும் IIT பம்பாய் மேம்பட்ட குவாண்டம் கணினி உருவாக்கத்தினை மேற்கொள்ளும்.
- இந்த முன்னெடுப்பானது புதுமை, புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் இந்தியா முழுவதும் குவாண்டம் வன்பொருள் நிபுணர்களின் பயிற்சியை ஊக்குவிக்கும்.
- இந்த திட்டம் இந்தியாவின் தொழில்நுட்ப இறையாண்மை மற்றும் மீக்கடத்துத் திறன், ஒளியணுவியல், சுகாதாரம் மற்றும் விண்வெளி போன்ற முக்கியத் துறைகளில் உள்ளார்ந்தத் தொழில்நுட்பத் திறன்களை வலுப்படுத்தும்.





# சுற்றுச்சூழல் செய்திகள்

## அமுர் பருந்துகளின் வலசை

- அமுர் பருந்துகள் ஒவ்வொரு இலையுதிர் காலத்திலும் வடகிழக்கு இந்தியாவிலிருந்து ஆப்பிரிக்காவிற்கு 5,000 முதல் 6,000 கி.மீ. வரை இடைவிடாமல் பயணித்து வலசை போகின்றன.
- 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், இந்திய வனவிலங்கு நிறுவனம் (WII) ஆனது இலகுரக அலை பரப்பிகளைப் பயன்படுத்தி அபாபாங், ஆலாங் மற்றும் அஹூ ஆகிய மூன்று பருந்துகளைக் கண்காணித்தது.
- அபாபாங் 6 நாட்கள் 8 மணி நேரத்தில் 6,100 கி.மீ. பறந்து தான்சானியாவினை

அடைந்தது; ஆலாங் 6 நாட்கள் 14 மணி நேரத்தில் 5,600 கி.மீ. பறந்து கென்யாவினை அடைந்தது; அஹூ 5 நாட்களில் 5,100 கி.மீ. பயணித்து சோமாலியாவினை அடைந்தது.


- 2012 ஆம் ஆண்டில் நாகாலாந்தில் மிகப் பெருமளவில் பதிவான வேட்டையாடலைத் தொடர்ந்து, இந்தக் கண்காணிப்புத் திட்டம் தொடங்கப்பட்டது என்பதோடு மேலும் 2016 ஆம் ஆண்டில் வலசை போகும் இனங்கள் தொடர்பான உடன்படிக்கையின் கீழ் இந்தியா கொன்றுண்ணி பறவை புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- வடகிழக்கு இந்தியாவில் 2 முதல் 3 வாரங்கள் வரை இப்பருந்துகள் தங்கி, அரேபியக் கடலைக் கடப்பதற்கு முன்னதாக உடலில் கொழுப்பு இருப்புக்களை உருவாக்க கரையான் கூட்டங்களை உண்கின்றன.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## ஆசிய-பசிபிக் பேரிடர் அறிக்கை 2025

Severe heat stress – number of days with heat index of 35°C or higher





Sources: ESCAP based on Climate Change Knowledge Portal (CCKP); and UN Geospatial.
Note: These maps show the median annual mean number of days exceeding 35°C (HI35) based on CMIP6 ensemble models.
Disclaimer: The boundaries and names shown and the designations used on this map do not imply official endorsement or acceptance by the United Nations. Dotted line represents approximately the Line of Control in Jammu and Kashmir agreed upon by India and Pakistan. The final status of Jammu and Kashmir has not yet been agreed upon by the parties.

- இந்த அறிக்கையை ஆசியா மற்றும் பசிபிக் பகுதிக்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணையம் (UN ESCAP) வெளியிட்டது.

- நகர்ப்புற வெப்பச் சூழ் தீவு விளைவு காரணமாக டெல்லி, கராச்சி, டாக்கா, மணிலா, ஷாங்காய் மற்றும் சியோல் போன்ற மாபெரும் ஆசிய நகரங்கள் 2–7°C கூடுதல் வெப்பத்தை எதிர்கொள்ளக் கூடும்.
- தெற்காசியாவானது ஆண்டிற்கு 300 நாட்களுக்கு மேல் 35°C க்கு மேலான வெப்ப குறியீட்டையும், சில பிராந்தியங்களில் 200 நாட்களுக்கு மேல் 41°C க்கு மேலான வெப்ப குறியீட்டையும் எதிர் கொள்ளக்கூடும்.
- அதிக வெப்பம் சுகாதார அபாயங்கள், மாசுபாடு, காட்டுத்தீ மற்றும் வறட்சியை மோசமாக்குவதோடு, மில்லியன் கணக்கான வெளிப்புறத் தொழிலாளர்களையும் பாதிக்கிறது.
- வெப்பத் தகவமைப்பு போதுமானதாக இல்லாவிட்டால் பொருளாதார இழப்புகள் மற்றும் வேலை நேரக் குறைப்புக்கள் கடுமையாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## மதிப்பீட்டு அறிக்கை 6





- IPCC AR6 அறிக்கைக்குப் பிந்தைய (மதிப்பீட்டு அறிக்கை 6) புதுப்பிப்பு ஆனது ஒரு சக துறையினால் மதிப்பாய்வு செய்யப்பட்ட அறிவியல் ஆய்வாகும்.
- இது இந்தியாவின் கண்காணிக்கப்பட்ட மற்றும் திட்டமிடப்பட்டப் பருவநிலை மாற்றங்கள் குறித்த சமீபத்திய மதிப்பீட்டை வழங்குகிறது.
- இது இந்தியாவிற்கான குறிப்பிட்ட புதிய கண்காணிப்பு தரவு மற்றும் மேம்பட்ட பருவ நிலை மாதிரிகளைப் பயன்படுத்தி, பருவநிலை மாற்றம் குறித்த அரசுகளுக்கு இடையேயான குழுவின் (IPCC) ஆறாவது மதிப்பீட்டு அறிக்கையை (AR6) அடிப்படையாகக் கொண்டது.
- 1901–1930 ஆம் காலக் கட்டத்துடன் ஒப்பிடும் போது 2015–2024 ஆம் காலக் கட்டத்தில் இந்தியாவின் சராசரி வெப்பநிலை கிட்டத்தட்ட 0.9°C அதிகரித்துள்ளதாக இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.
- மேற்கு மற்றும் வடகிழக்கு இந்தியாவில் ஆண்டின் வெப்பமான நாள் ஆனது 1950 ஆம் ஆண்டுகளில் இருந்து 1.5–2°C ஆக வெப்பமடைந்துள்ளது என்பதோடு இது அடிக்கடி நிகழும் மற்றும் கடுமையான வெப்ப அலைகளுக்கு வழி வகுக்கிறது.
- இந்திய-கங்கை சமவெளிகள் மற்றும் வடகிழக்கில் சரிவுகள் பதிவாகியுள்ளதுடன் தென் மேற்கு பருவமழை ஒழுங்கற்றதாக மாறியுள்ளது.
- மத்திய இந்தியா மற்றும் கடலோர குஜராத்தில் அதிக மழைப்பொழிவு நிகழ்வுகள் தீவிரமடைந்துள்ளன.

- வெப்பமண்டல இந்தியப் பெருங்கடல் ஆனது தசாப்தத்திற்கு 0.12°C வீதத்தில் வெப்பம் அடைகிறது.
- இந்த வெப்பமயமாதல் ஆனது, கடல் வெப்ப அலைகளைச் சமீபத்திய தசாப்தங்களில் ஆண்டிற்கு 20 நாட்களில் இருந்து 2050 ஆம் ஆண்டிற்குள் கிட்டத்தட்ட 200 நாட்களாக அதிகரிக்கச் செய்கிறது என்பதோடு இது பவளப்பாறைகள் மற்றும் மீன்வளத்தை அச்சுறுத்துகிறது.
- ஆசியாவின் "நீர் கோபுரங்கள்" என்று அழைக்கப்படும் இந்து குஷ் இமயமலை பனிப் பாறைகள் வேகமாக உருகி வருகின்றன.
- 1.5–2°C என்ற வரம்பிலான புவி வெப்பமடைதலின் கீழ் 2100 ஆம் ஆண்டிற்குள் பனிப் பாறை அளவு 30–50% குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- அரபிக்கடலில் எழும் வெப்பமண்டலப் புயல்கள் வலுவடைந்துள்ளன என்பதோடு இதனால் சமீபத்திய தசாப்தங்களில் அதிகபட்சப் புயல் தீவிரம் 40% அதிகரித்துள்ளது.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச ஜாகுவார் தினம் 2025 - நவம்பர் 29




- ஜாகுவார் மற்றும் அவற்றின் வளங்காப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்தத் தினத்தின் நோக்கமாகும்.
- ஜாகுவார்களின் சுற்றுச்சூழல் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து அவற்றைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை ஆதரிப்பதே இந்த தினத்தின் நோக்கமாகும்.
- இது முதன்முதலில் 2018 ஆம் ஆண்டில் பாந்தெரா (ஒரு பெரும்/காட்டுப் பூனை வளங் காப்பு அமைப்பு) தலைமையிலான உலகளாவிய வளங்காப்பு பணிகள் மூலம் கொண்டாடப் பட்டது.
- இந்த அனுசரிப்பு 18 நாடுகளில் ஜாகுவார் நடமாட்டப் பாதைகளைப் பாதுகாக்கும் ஜாகுவார் வழித்தட முன்னெடுப்பினை ஏற்றுக் கொண்டதைக் குறிக்கிறது.
- ஜாகுவார் (பாந்தெரா ஒன்கா) அமெரிக்காவின் மிகப்பெரிய பெரும் பூனைகள் ஆகும்

என்பதோடு மேலும் இவை சுற்றுச்சூழல் சமநிலையைப் பராமரிக்க உதவுகின்றன.

- ஜாகுவார் சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தின் (IUCN) செந்நிறப் பட்டியலில் அச்சுறுத்தல் நிலையை அண்மித்த இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.

# இதரச் செய்திகள்

## சிர்பூர் தொல்பொருள் தளம்

- சிர்பூர் என்பது சத்தீஸ்கரின் மகாசமுண்ட் மாவட்டத்தில் உள்ள 5-12 ஆம் நூற்றாண்டுகளின் பல்சமயம் சார் தொல்பொருள் நகரமாகும்.
- இது ராய்ப்பூருக்கு அருகில் மகாநதி ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.
- பாண்டுவன்ஷி மற்றும் சோமவம்ஷி மன்னர்களின் (6-8 ஆம் நூற்றாண்டு) கீழ் தட்சிண கோசலத்தின் தலைநகராக சிர்பூர் இருந்தது.
- இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில் 22 சிவன் கோயில்கள், 5 விஷ்ணு கோயில்கள், 10 புத்த விஹாரங்கள் மற்றும் 3 சமண/ஜைன விஹாரங்கள் கண்டறியப் பட்டுள்ளன.
- முக்கிய நினைவுச்சின்னங்களில் 7 ஆம் நூற்றாண்டு இலட்சுமண கோயில், சுரங் திலா கோயில் வளாகம், 8 ஆம் நூற்றாண்டு தீவர்தேவ் புத்த விஹார மற்றும் பாலேஷ்வர் கோயில் ஆகியவை அடங்கும்.
- சிர்பூரின் கட்டிடக்கலை ஆனது சைவ, வைணவ, பௌத்த மற்றும் சமண மரபுகளை ஒன்றிணைத்து காணப்படுகிறது.
- இந்த இடத்தில் அரண்மனைகள், சந்தைகள், ஸ்தூபங்கள், மடங்கள், தியான அறைகள், நீர் விநியோக அமைப்புகள் மற்றும் 6 ஆம் நூற்றாண்டு சந்தை வளாகம் ஆகியவை அடங்கும்.
- சத்தீஸ்கர் மாநில அரசு ஆனது யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளத்தின் பட்டியலில் பரிந்துரைக்கப் படுவதற்காக தயாராகி வருகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★